*11*

*வெற்றிகரமான திருமணத்திற்கான வழிவகை ...*

# தெய்வீக இலட்சியங்களைக் கொண்டிருத்தல்

*திருமணமானவுடன், "ஒன்றுசேர்ந்த நமது வாழ்வில் இனி நாம் என்ன செய்யப் போகிறோம்?" என்ற கேள்வி உங்களை எதிர்கொள்ளுகிறது. ஒருவேளை, தேவனுக்கு பிரியமாய் வாழ்ந்து பரலோகம் செல்வதுதான்[1] எங்களது இலட்சியம் என்று ஏற்கனவே நீங்கள் முடிவுசெய்தவர்களாயிருந்தாலும் கூட, சில கேள்விகள் உங்கள் முன் இருக்கத்தான் செய்யும். "தேவனை நாங்கள் மிகச்சிறப்பாக எவ்விதம் சேவிப்பது?"; "தனிப்பட்ட உத்தியோகங்களிலே நாங்கள் சாதிக்க நினைப்பது என்ன?" நெடுங்கால திட்டங்களைப்பற்றியும் நீங்கள் முடிவெடுக்க வேண்டியிருக்கும்: எந்த இடத்தில் நீங்கள் குடியிருக்கப் போகிறீர்கள், ஒரு பரந்த நிலப்பரப்பில் விவசாயம் செய்யப் போகிறீர்களா, இல்லையா அல்லது ஒரு தொழில் தொடங்கப் போகிறீர்களா, உங்களது அந்திமகாலத்தில் உங்களை நீங்களே கவனித்துக் கொள்வதற்கு என்ன ஏற்பாடு செய்யப்போகிறீர்கள், என்பன போன்றவை. அவைகளை நீங்கள் எவ்வாறு தீர்மானிக்கப் போகிறீர்கள்? உங்களது மணவாழ்விற்கான இலட்சியங்களை நீங்கள் அமைத்துக்கொள்வது எப்படி?*

## இலட்சியங்களை அமைத்துக் கொள்வதின் அவசியத்தை உணர்ந்து கொள்ளுங்கள்

*இலட்சியங்களை அமைத்துக் கொள்வதின் அவசியத்தை தெரிந்துகொள்ளுங்கள். "எதையுமே நீங்கள் குறிவைக்காத பட்சத்தில், அதைத்தான் நீங்கள் சாதிக்கப் போகிறீர்கள்" என்று ஒருவர் சொன்னார். தேவனை சேவிப்பதும் பரலோகம் சென்றடைவதுமே ஓர் கிறிஸ்தவ தம்பதியரின் முழுமுடிவான இலட்சியமாயிருக்கிறது. வேறு எந்த இலட்சியத்திலும் மாற்றங்கள் ஏற்படும் சாத்தியங்களிருந்த போதிலும், எதிர்காலத்தைப் பற்றியும், நீங்களிருவருமே சேர்ந்து வாழும் வாழ்க்கையில் சாதிக்கப் போகிறவைகளைப் பற்றியும் கருத்துள்ளவர்களாயிருப்பது பயனுள்ளதாயிருக்கும். நார்மன் ரெட் என்பவர் இவ்வாறு கூறியிருக்கிறார்:*

> *இலட்சியங்கள், நீங்கள் செல்லவேண்டிய திசையை உங்களுக்கு உணர்த்தும் ... அவைகள் எதிர் காலத்தைப் பற்றியதாய் இருக்கின்றபடியால், இப்போதைய சூழ்நிலையில் நீங்கள் எதிர்கொள்ளும் சில இக்கட்டுகளில், அவைகள் உங்களைத் தூக்கி நிறுத்திடும். வருங்காரியங்களைப் பற்றிய நல்ல நம்பிக்கையில் நீங்கள் கவனம் செலுத்த முடியும் ... இலட்சியங்கள், உங்கள் நேரத்தை மிகவும் பிரயோஜனமாக பயன்படுத்திக் கொள்ள உதவுகின்றன.*

ஏனெனில், எது முக்கியமானது என்றும், எது முக்கியமானது அல்ல என்றும் நீங்கள் கண்டறிவதற்கு அவை உதவிபுரிகின்றன.[2]

இலட்சியமுள்ள ஒருவர், தனது குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, நெடுங்காலம் உழைப்பதற்கு மனமுள்ளவராயிருக்கிறார். உதாரணத்திற்கு, பள்ளி ஆசிரியராக விரும்புகிற ஒருவர், முழுநேரம் உழைப்பதை ஒத்தி வைத்து விட்டு, ஓர் பட்டம் பெறுவதற்காக படிப்பைத் தொடர்ந்து, நெடுங்காலப் பயனை அடைவதற்கு முயற்சிப்பவராய் இருப்பார்.

## உங்களது வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் இலட்சியங்களை அமைத்துக் கொள்ளுங்கள்

நீங்களிருவருமாகச் சேர்ந்து வாழும் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் இலட்சியங்களை அமைத்துக் கொள்வதற்கு கருத்துள்ளவர்களாயிருங்கள். பின்வரும் அம்சங்களில் நீங்கள் இலட்சியங்களை முன்நிறுத்திக் கொள்ளுதல் சிறப்பாயிருக்கும்.

*(1) உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை.* இருவருமாகச் சேர்ந்து கிறிஸ்துவுக்காகவும், சபைக்காகவும் என்ன சாதிக்கப் போகிறீர்கள்?[3]

*(2) உங்கள் தனிப்பட்ட வாழ்க்கை.* தேவனால் உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள திறமைகளையும், நாட்டங்களையும் நீங்கள் எவ்விதம் விருத்தி செய்யக் கூடும்?

*(3) உங்கள் மணவாழ்க்கை.* எதிர்காலத்தில் உங்கள் மணவாழ்க்கை எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும்?

*(4) உங்கள் கல்வி.* நீங்கள் விரும்புவதும், உங்களுக்கு தேவைப்படுவதுமாயிருக்கிற கல்வி எத்தகையதாயிருக்கிறது? உங்கள் பிள்ளைகளின் படிப்பிற்காக நீங்கள் என்ன இலட்சியங்களைக் கொண்டிருக்கப் போகிறீர்கள்?

*(5) உங்கள் தொழில் அல்லது வியாபாரம்.* உங்கள் தொழிலில் நீங்கள் சாதிக்க நினைப்பது என்ன?

*(6) உங்கள் சமூக, உள்ளூர் மற்றும் அரசியல் வாழ்க்கை.* நீங்கள் வாழும் சமுதாயத்திற்கென்று என்ன செய்ய விரும்புகிறீர்கள்? என்ன தொடர்புகளை நீங்கள் உருவாக்கிக் கொள்ள விரும்புகிறீர்கள்?

## நெடுங்கால மற்றும் குறுகிய கால இலட்சியங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்

நெடுங்கால மற்றும் குறுகிய கால இலட்சியங்கள் ஆகிய இரண்டையுமே வைத்திருங்கள். இயேசுவை சேவிப்பதும், தேவசித்தம் செய்வதும், பரலோகம் சென்றடைவதுமே உங்கள் முழுமுடிவான இலட்சியமாயிருக்க வேண்டும். அதோடு கூட (அதற்கு உறுதுணை செய்யும் வகையில்) *இந்த* வாழ்க்கைக்குரிய வேறு சில நெடுங்கால இலட்சியங்களும் உங்களுக்கு இருக்கவேண்டும்: உங்களது வேலையில் எதை சாதிக்க வேண்டுமென நம்புகிறீர்கள், இன்னும் பல ஆண்டுகள் கழித்து உங்களது மணவாழ்க்கை எப்படியிருக்க வேண்டுமென விரும்புகிறீர்கள், வயதான தம்பதியர் என்ற நிலையில் என்ன செய்யப் போகிறீர்கள் என்பவைதான்

அவைகள். பின்னர், உங்கள் நெடுங்கால இலட்சியங்களை சாதிப்பதற்கு உதவிகரமாயிருக்கும் குறுகிய கால இலட்சியங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஓர் மகிழ்ச்சிகரமான, நீடித்த மணவாழ்வு தான் உங்கள் நெடுங்கால இலட்சியமாயிருந்தால், மணவாழ்வு பற்றி ஆண்டுதோறும் வெளிவரும் பல புத்தகங்கள் அல்லது கட்டுரைகளைப் படித்தல் மற்றும் நீங்களிருவர் மட்டும் மற்றவர்களைவிட்டு பிரிந்து தனிமையிலிருப்பதற்காக வெளியில் செல்லும் வேளைகளை ஏற்பாடு செய்தல் ஆகியவை உங்களது குறுகிய கால இலட்சியங்களில் உள்ளடங்கியிருக்கும்.

## இலட்சியங்களை வகுப்பதில் இருவருக்குமே திருப்திகரமானதோர் வழிமுறையை வளர்த்துக் கொள்ளுங்கள்

இலட்சியங்களை வகுப்பதிலும், முடிவெடுப்பதிலும், பிரயோஜனமானதொரு நடைமுறையைப் பயன்படுத்துங்கள். உங்களது இலட்சியங்களும், தீர்மானங்களும் உங்களிருவரையுமே பாதிக்கப் போகிறவைகளானபடியால், இருவரையுமே திருப்திபடுத்துகிறதான ஓர் நடைமுறைக்கு நீங்கள் உடன்படவேண்டும்.

### முடிவெடுப்பதில் கணவன் மனைவியின் பங்கு

முடிவெடுக்கின்ற விஷயத்தில் யார் ஆதிக்கம் செலுத்தவேண்டும்? வேதாகம கருத்தின்படி, கணவனே குடும்பத்தின் தலைவனாயிருக்கின்றபடியால் (காண்க எபேசியர் 5:22-24), குடும்பத்தை பாதிக்கின்ற முக்கிய விஷயங்களில், மனைவியிடம் ஆலோசித்த பிறகு, கணவன் தான் முடிவெடுக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவ கணவன், தன் மனவிக்கு எது சிறந்ததென நினைக்கிறானோ அதையே எப்போதும் செய்திட வேண்டும்!

இருப்பினும், அந்தக் கொள்கையானது, நடைமுறையில் சற்று கடினமாகத்தான் மாறிவிடுகிறது. கிறிஸ்தவ மணவாழ்வில் பங்காளிகள் இருவருமே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க விரும்புகின்றனர்; ஆனால் இறுதியாக முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு கணவனையே சாரும். அந்த தீர்மானத்திலும், தன் மனைவியின் ஆசைகள் மற்றும் தேவைகளை மனதில் கொண்டு தான், அவர் முடிவெடுக்கவேண்டும். அதே சமயத்தில், அவர் தமது குடும்பத்தை தேவபக்தியாய் வழிநடத்துவதற்கும், போஷிப்பதற்கும் எது தேவையானதோ, அதை அவர் செய்துதான் ஆகவேண்டும். காலப்போக்கில், மனைவிக்கு, மணவாழ்க்கைக்கு மற்றும் குடும்பத்திற்கு நல்லது எது என்பதைப் பார்த்து அது ஒருவேளை தனது குறுகிய கால இலட்சியங்கள் மனைவியின் ஆசைகளுக்கு ஒத்துப் போகாமலிருந்தாலும், அவைகளையும் அவர் சாதித்தாக வேண்டும்.

### மனைவியின் இலட்சியங்களில் சிக்கல்

கணவனுக்கு அடிபணிந்திருப்பதனால், ஒரு கிறிஸ்தவ பெண்மணியானவர், சில சமயங்களில், தனது தனிப்பட்ட இலட்சியங்களைப் பொறுத்தவரையில்

ஏமாற்றங்களை சந்திக்கிறாள். அப்போது, தேவனுக்கு பிரியமான வகையிலும், அவளுக்கும் அவளது கணவனுக்கும் மனதிருப்தி அளிக்கும் வகையிலும் ஓர் பெண்மணிக்கு உதவிகரமாக என்ன செய்திடலாம்?

*(1) அவள் தனது வாழ்க்கையின் விருப்பங்களை சற்று மாற்றியமைத்துக் கொள்ளலாம்.* தனது கணவனது வெற்றிகரமான பணியிலும், தான் ஒரு கிறிஸ்தவ பெண்மணியாகவும் மனைவியாகவும் இருக்கின்ற பங்கினிலும் மனதிருப்தி கொள்ளும்வகையில் அவள் தனது இலட்சியங்களை மாற்றியமைத்துக் கொள்வதற்கு சாத்தியமுண்டு. அதாவது ஒரு சிறந்த முழுநேர கிறிஸ்தவ மனைவியாகவும், தாயாகவும் தான் இருக்கும்படியாக தனது குறிக்கோளை திசைதிருப்பிக் கொள்ளலாம்.

*(2) சில இலட்சியங்களை அவள் ஒத்திப் போடலாம்.* ஒரு கிறிஸ்தவ பெண்மணியானவள் தனது கணவனின் சம்மதத்தோடு தெரிவு செய்து கொள்ளக் கூடிய பொதுவான முடிவு இது. பிள்ளைகள் சிறியவர்களாயிருக்கையில் தாயானவள் முழுநேரமும் வீட்டிலேயே இருக்கவேண்டியிருக்கிறது; அவர்கள் வளர்ந்து பெரியவர்களான பிறகு அவள் தனது நாட்டங்களைத் தொடருகிறாள். தனது கணவன் அளிக்கும் ஊக்கத்துடன் அவள் தனது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கலாம்.[4]

*(3)* அவளது இலட்சியங்கள் கொஞ்ச காலமாவது ஆதிக்கம் செலுத்தும் வகையிலிருக்கலாம். மூன்றாவது சாத்தியக்கூறாக, அவள் தனது கணவனது ஊக்கத்துடன், தனக்கான ஓர் உத்தியோகத்திற்கு முயற்சிக்கலாம். சில சமயங்களில், மனைவியின் உத்தியோகம்தான் குடும்ப வருமானத்தின் பெரும்பங்கை ஈட்டித்தருகிறது. கணவனோ குறைவான சம்பளத்திற்கு வேலைசெய்கிறவராகவோ அல்லது வீட்டிலே பிள்ளைகளை கவனித்துக் கொள்பவராகவோ இருப்பார். இத்தகைய ஏற்பாடு, வேதவாக்கியங்களை மீறுவதாயிருக்காது.[5]

## இலட்சியங்களை மாற்றிக் கொள்ள இடங்கொடுங்கள்

காலம் மாறும் போது உங்கள் இலட்சியங்களும் மாறும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். மாற்றப்படக் கூடிய தன்மைதான் வாழ்க்கையின் மாறாத உண்மையாயிருக்கிறது. காலம் போகப் போக, *மக்களும் மாறுகின்றனர்.* கணவனுக்கும் மனைவிக்கும் புதிய நாட்டங்கள் உருவாகின்றன. அத்தோடு, *சூழ்நிலைகளும் மாறுகின்றன.* எந்த வேலைக்காக அவர் தன்னை தயார் செய்து கொண்டிருந்தாரோ அந்த வேலை, தொழில்நுட்ப முன்னேற்றங்களின் காரணமாக தள்ளுபடி செய்யப்படலாம். எதிர்பாராத வேலை வாய்ப்புகள், பொருளாதார சீர் குலைவுகள், சொந்தப் பிரச்சனைகள், பிள்ளைகள் உருவாகுதல், நோய்வாய், குடும்பத் தொல்லைகள் போன்ற ஏதாவது நிகழ்வுகள், தம்பதியர் சேர்ந்து வாழும் அமைதியான நீரோட்டத்தில் கலக்கத்தை ஏற்படுத்தி விடலாம்.

மாற்றங்கள் நேரிடும்போது உங்கள் இலட்சியங்களைப்பற்றி என்ன செய்வது? உங்களது இலட்சியங்கள் மாற்றியமைக்கத் தக்கவையாக இருக்க வேண்டும். உதாரணமாக, ஒருவர் தனது உத்தியோகத்தை விட்டு விட்டு

வேறொரு பணியினை ஆரம்பிப்பது என்பது பொதுவாகவே இயல்பானதுதான். வழக்கமாக, ஒரு மனிதனுக்கு வயதாகி, அவரது சூழ்நிலை மாறும்போது, முடிந்தவரையிலும் பணத்தை சம்பாதிக்க முயற்சிப்பதை விட்டு விட்டு, பலருக்கு உதவிகரமாயிருக்கும் ஒரு பணியின் பக்கம் தனது கவனத்தைத் திருப்பலாம். உதாரணமாக, ஒரு பிரசங்கியாகவோ, போதகனாகவோ அல்லது ஓர் ஆலோசகனாகவோ மாறிடலாம். அவ்வாறு நேரிடும்போது குடும்பத்தின் இலட்சியங்களும் மாறிப்போகும் என்பது நாமறிந்ததே. கிறிஸ்தவ தம்பதியரைப் பொறுத்த வரையில், ஏதாவதொரு முக்கிய மாறுதலுக்கான முடிவெடுக்கையில், அது இருவருக்குமே திருப்திகரமான விதத்திலிருக்கவேண்டுமென்பதில் அக்கறையுள்ளவர்களாயிருப்பார்கள்.

சூழ்நிலைகளுக்கேற்ப உங்கள் இலட்சியங்களும் மாறுகின்றபடியால், தம்பதியராகிய நீங்களும் உங்கள் துணையாளியும், உங்களது இலட்சியங்களை இடையிடையே மறுபரிசீலனை செய்து கொள்வது நல்லதோர் யோசனையாயிருக்கிறது. ஒரு தம்பதியினர் சில குறிப்பிட்ட கேள்விகளைப் பற்றி விவாதிப்பதற்கென்று ஒவ்வொரு வருடமும் திட்டமிட்டுக் கொள்ளலாம்: அவையாவன. "நாம் நமது இலட்சியங்களை நிறைவேற்றி வருகிறோமோ?"; "எந்த இலட்சியங்களையெல்லாம் நாம் விட்டு விடவேண்டும்?"; "புதிதாக எந்த இலட்சியங்களை நாம் சேர்த்துக் கொள்ளலாம்?"

## தேவனுடைய வழிநடத்துதலை நாடுங்கள்

இலட்சியங்களை முன்வைக்கும் போதும், தீர்மானங்களை முடிவெடுக்கும் போதும் தேவனை கருத்தில் கொள்ளுங்கள். தம்பதியராய் நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானத்திலும், தேவனை சேவிப்பதும், பிரியப்படுத்துவதுமே உங்களது தலையாய குறிக்கோளாயிருக்க வேண்டும்.

*(1) இலட்சியங்களை அமைத்துக் கொள்ள நீங்கள் சிந்திக்கும்போது, அவருடைய வழிகாட்டுதலுக்காக ஜெபியுங்கள்.* அவர் உங்களை வழிநடத்துபவராயிருக்க நாடுங்கள், நீங்கள் என்ன செய்ய வேண்டுமென அவர் விரும்புகிறரோ அதையே நீங்கள் செய்ய விரும்புவதாக அவரிடம் கூறுங்கள். "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்'' என்று பிலிப்பியர் 4:6 கூறுகிறது.[6]

*(2) உங்கள் இலட்சியங்களை நிறைவேற்றுவதில் அவரது ஒத்தாசையை நம்பி திட்டமிடுங்கள்.* தேவனுக்காகவும், சபையின் வளர்ச்சிக்காகவும் பெரிய அளவில் திட்டமிடுங்கள். நீங்கள் கற்பனை செய்வதற்கும் மேலாக தேவன் உங்களைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்வார் என்பதை விசுவாசித்து, சாத்தியக் கூறுகளைத் தாண்டி சாதனைபடைக்க முயற்சியுங்கள். பிலிப்பியர் 4:13 (''என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு'') மற்றும் எபேசியர் 3:20 (''நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்கு செய்ய வல்லவராகிய அவருக்கு ... [தேவனுக்கு]") போன்ற வேத பகுதிகளை கருத்தில் கொள்ளுங்கள்.

*(3) தெய்வாதீனமான அவரது வழிகாட்டுதலை ஏற்றுக் கொள்ளத்*

தயாராகுங்கள். தேவன் தமது உலகில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். உங்களது திட்டங்களைப் பற்றி நீங்கள் ஜெபிக்கின்ற பொழுது, அவர் சில கதவுகளை அடைத்து விட்டு, வேறு சில கதவுகளைத் திறந்து விடக்கூடும். தேவன் உங்களது வாழ்க்கையில் தெய்வாதீனமாக என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் திட்டவட்டமாக அறிந்து கொள்ளக் கூடாமலிருப்பினும் நீங்கள் என்ன செய்ய வேண்டுமேன்பதை அவர் அந்த திறந்த கதவுகள் மற்றும் அடைபட்ட கதவுகள் மூலம் தெரிந்து கொள்ள உதவி செய்கிறார் என்றே நீங்கள் கருதிட வேண்டும்.

உதாரணத்திற்கு, ஒரு கிறிஸ்தவ தம்பதியினர் தங்கள் இலட்சியங்களை நிறைவேற்ற முயற்சிக்கும் போது பின்னடைவுகளையும் ஏமாற்றங்களையும் துயரச் சம்பவங்களையும் சந்திக்க வேண்டியிருக்குமென்பதை அறிந்தவர்களாயிருக்க வேண்டும். ஆயினும், தேவன் தம்முடைய ஜனங்களை, கஷ்ட காலங்களினூடே தெய்வாதீனமாக வழிநடத்திச் செல்லுகிறார். உங்கள் வாழ்க்கையில் என்ன நேர்ந்தாலும் சரி, அதனை தேவன் உங்களுக்கு எப்படியாவது நன்மையாக முடியும்படி செய்யக்கூடும்; அவர் அப்படியே செய்வார் என்று நீங்கள் உறுதியாக நம்ப முடியும் (ரோமர் 8:28).

## முடிவுரை

நீங்கள் திருமணம் செய்து கொள்ளும்போதே, இனிமேல் வாழ்க்கை போகின்ற போக்கிலேயே போய்விடலாமா அல்லது ஓர் தீர்மானத்தின் அடிப்படையிலே வாழ்க்கை நடத்தலாமா என்பதை தெரிவு செய்து கொள்ளலாம். சில சமயங்களில், எதிர்காலத்தைக் குறித்து திட்டமிடாதவர்களுக்கு தேவனுடைய கிருபையினாலே ஆச்சரியமான ஆசீர்வாதங்கள் வந்து சேர்வதுண்டு - ஆனால் உங்களுக்கும் அப்படியே வந்து விடும் என்று நீங்கள் நம்பிக் கொண்டிருக்கலாகாது. மாறாக, உங்களது மணவாழ்க்கையிலே, உங்களிருவருக்குமே மனநிறைவைத் தருவதாகவும், தேவனுக்கு மகிமையை வருவிப்பதாகவும் இருக்கிற குறுகிய கால மற்றும் நெடுங்கால இலட்சியங்களை சாதிப்பதற்கு நீங்களிருவருமே சேர்ந்து திட்டமிட வேண்டும். அவ்வாறு செய்வதில் அலட்சியம் காட்டுவதால், தனிப்பட்ட மற்றும் மணவாழ்க்கையில், தோல்வியை நாமே வரவழைக்கிறவர்களாயிருப்போம்.

---

குறிப்புகள்

[1]"உங்கள் திருமணத்தை ஆன்மீக அஸ்திபாரத்தின்மேல் கட்டியெழுப்புதல்" என்ற பாடத்தை மறுபடியும் பாருங்கள். [2]H. Norman Wright, *So You're Getting Married* (Ventura, Calif.: Regal Books, 1985), 114. [3]பவுலுக்கு ஓர் இலட்சியம் இருந்தது. "ஒன்று செய்கிறேன் ... கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்றார் அவர் (பிலிப்பியர் 3:13ஆ, 14; 1 கொரிந்தியர் 9:26, 27 காண்க). அவர் அந்த இலட்சியத்தை எட்டிப் பிடித்தார் என்பதற்கான ஆதாரம் 2 தீமோத்தேயு 4:7, 8ல் அளிக்கப்பட்டுள்ளது. உங்களது ஆவிக்குரிய இலட்சியங்களில், "கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாய் மாறிட வேண்டும்" என்கிற (ரோமர் 8:29); "தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளரவேண்டும்" என்கிற (எபேசியர் 4:15); "கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தப்படவேண்டும்"

*என்கிற (கொலோசெயர் 1:28); கிறிஸ்துவைப் போலவே மாறிடவேண்டும் என்கிற (1 கொரிந்தியர் 11:1; 1 பேதுரு 2:21) இலட்சியங்களும் காணப்பட வேண்டும். சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பதன் மூலம், கிறிஸ்துவின் பெரிதான ஆணையை நிறைவேற்றுவதில் நீங்களும் பங்கு கொள்வதற்கு திட்டமிட வேண்டும் (மத்தேயு 28:19, 20). "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று கூறுமளவிற்கு தகுதி பெறுவதுதான் பூமியிலே ஒரு கிறிஸ்தவனின் முழுமுடிவான இலட்சியமாயிருக்கிறது (கலாத்தியர் 2:20ஆ). [4]ஒரு கிறிஸ்தவ பெண்மணியின் வாழ்க்கை எவ்விதமாக இருக்கலாம் என்பதைப் பற்றியதோர் கருத்தினை, ஹெரிடேஜ் கிறிஸ்தவ பல்கலைக்கழகத்தின் இணை பேராசிரியரான சிந்தியா கய் அவர்கள் எனக்களித்தார். அவர் கல்லூரியில் கற்றுவந்தபோது அவரது பேராசிரியர்களில் ஒருவர், ஒரு பெண் தனது வாழ்நாட் காலத்தை சுமார் இருபது வருடங்களாக மூன்று கால கட்டங்களாக பிரித்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை அளித்தாராம். அதில், முதல் இருபது வருடங்களை வளர்வதற்கு செலவிடலாம். இரண்டாவது இருபது வருடங்களைத் தனது குடும்பத்திற்கென்று அர்ப்பணித்து, தனது கணவனுக்கு ஆதரவாய், தன் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்திடலாம். மூன்றாவது இருபது வருடங்களில் தனது குடும்பத்தின் மீது மட்டுமல்லாமல், அடுத்தவர் மீதும் கவனம் செலுத்தலாம்: சபைக்கும் சமூகத்திற்கும் நன்மை செய்வதற்காக முழுநேரமாக வேலை செய்திடலாம் (2005 ஆகஸ்டு மாதம், சிந்தியா கய் அவர்கள் ஆசிரியருடன் தனிப்பட்ட முறையில் உரையாடின போது). [5]மனைவிதான் குடும்பத்தின் முக்கிய வருமானத்தை ஈட்டுவளாயிருந்தாலும் கூட, கணவன் அந்த "மனைவிக்கு தலையாய்" இருந்திடலாம் (எபேசியர் 5:22-24), அவள் அவனுக்கு கட்டுப்பட்டு "வீட்டை நடத்திடலாம்" (1 தீமோத்தேயு 5:14; தீத்து 2:5ஐப் பார்க்கவும்). [6]மேலும் மத்தேயு 7:7, 8; 1 யோவான் 5:14ஐப் பார்க்கவும்.*